**செய்தி வெளியீடு எண்: 737** **நாள்:31.10.2019**

**<u>இன்று (31.10.2019), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நல்ல பல கருத்துக்களை வழங்கி அமர்ந்திருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் **திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

முன்னிலை உரை ஆற்றி அமர்ந்திருக்கிற மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் **திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் **திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

வருகை தந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
மரியாதைக்குரிய வாரியத் தலைவர் அவர்களே,
கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கிற அரசு தலைமைச் செயலாளர் அவர்களே,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே,

நன்றியுரை ஆற்ற உள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே,

அரசு அலுவலர்களே மற்றும் பணியாளர்களே!
சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பொறுப்பாளர்களே
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

‘‘**தமிழ்நாடு விரைவான வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வரும் மாநிலம்**’’ என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் தொடர்ந்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்திச் செல்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் உள்ளன. தேசிய அளவில் 31 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 48.45 சதவிகிதம் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களைக் கொண்டு, நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

**கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு** என்றார் மகாத்மா காந்தியடிகள். தமிழ்நாட்டில் உள்ள 31 ஊரக மாவட்டங்களில் 79 ஆயிரத்து 394 குக்கிராமங்கள் உள்ளடக்கிய 12 ஆயிரத்து 524 ஊராட்சிகள் உள்ளன.

ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவது, சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை அளிப்பது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தனிநபர் குடும்பங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது, நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல், நகரங்களுக்கு இணையான கட்டமைப்புகளை கிராமங்களிலும் உருவாக்குதல் போன்ற எண்ணற்ற ஊரக வளர்ச்சித் திட்டங்களை தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

**‘‘ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்**’’ என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு செயல்பாட்டையும் தாண்டி, தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தின் வளம் மற்றும் நிலைத்த உயர்வினை உருவாக்கி பெரும் மாற்றம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் ‘‘**தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம்**’’

என்ற ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டம் 918 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டமானது, 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில், 3,994 ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக 6 வருடங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், வேளாண் சார்ந்த மற்றும் வேளாண்சாரா துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் ஆகியோர் மிகுந்த பயன் அடைவார்கள். இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 172 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் இத்திட்டத்தில் பணியாற்றுவதற்காக மாவட்ட செயல் அலுவலர்கள், இளம் வல்லுநர்கள், செயல் அலுவலர்கள், வட்டார அணித் தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் என 525 நபர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 1930–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, சரித்திரத்தில், ஒரே ஆண்டில் கிட்டத்தட்ட 17,600 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி சரித்திரம் படைத்த அரசு அம்மாவின் அரசு. அதேபோல, இன்றைக்கு பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பை இளைஞர்களுக்கு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்ற அரசும் அம்மாவினுடைய அரசு என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.**

**“மரத்தில் படரும் கொடியே, உன்னை**
**வளர்த்தவரா இங்கு படரவிட்டார்!**
**மண்ணில் நடக்கும் நதியே, உன்னை**
**படைத்தவரா இந்த பாதை சொன்னார்!**
**உங்கள் வழியே, உங்கள் உலகு, இந்த**
**வழிதான் எந்தன் கனவு!**

என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாடலுக்கு ஏற்ப, பெண்கள் யார் தயவும் இன்றி தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்காக, பெண்களின் நல்வாழ்வுக்காக மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட திட்டம்தான் “**மகளிர் சுயஉதவிக் குழுக்கள்**” ஆகும். தமிழ்நாட்டில் பெரும் வெற்றியடைந்த திட்டங்களில் முக்கியமான திட்டம் மகளிர் சுய உதவி குழுத் திட்டமாகும்.

சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக்கடன் இணைப்புத் திட்டம் 1992–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தபட்டு வருகிறது. சுய உதவிக் குழு – வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் மூலம் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை மக்களை சென்றடைவதால், எண்ணற்ற குடும்பங்கள் வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களை தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தை உயர்த்தி, கடன் சுமையிலிருந்து மீளவும், குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளவும் மற்றும் வறுமை சுழற்சியிலிருந்து விடுபடவும், பெண்கள் சொந்தக் காலில் நிற்பதற்கும் உதவிகரமாக உள்ளது.

புதியதாக சுமார் 1 லட்சத்து 20 ஆயிரம் குழுக்கள் உருவாக்கப்பட்டது மட்டுமின்றி, இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த 2011–ஆம் ஆண்டு முதல், இதுவரை 20 லட்சத்து 64 ஆயிரத்து 678 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 57 ஆயிரத்து 876 கோடியே 71 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது இலக்காக குறிக்கப்பட்ட 50 ஆயிரம் கோடி ரூபாயை விட கூடுதலாகும். குறிப்பாக 2018–19–ஆம் ஆண்டில் 2 லட்சத்து 95 ஆயிரத்து 612 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 11 ஆயிரம் கோடி ரூபாய்

வங்கிக்கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மிகுதியாக **11,449** கோடி ரூபாய் வழங்கி மாண்புமிகு அம்மாவின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2019–2020** நிதியாண்டில் **12,500** கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை **5** ஆயிரத்து **247** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இந்த இனிய விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **150** கோடி ரூபாய் அளவில் கடன் வழங்கப்படவுள்ளது என்பதை பெருமகிச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், **110** கோடியே **92** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்டம், **95** கோடியே **51** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட வேலூர் மாவட்டம் அரக்கோணம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், **73** கோடியே **8** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், **67** கோடியே **63** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட திருவொற்றியூர்–பாதாள சாக்கடைத் திட்டம் உட்பட சுமார் **550** கோடியே **50** லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை இன்று துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோல், **61** கோடியே **98** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூர்–வில்லிவாக்கம் சந்திக்கடவு எண் **1**–ன் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பணி, **49** கோடியே **56** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கம், ஆமுல்லவாயல் மற்றும் பர்மா நகரில் பாலம் அமைக்கும் பணி உட்பட **112** கோடியே **62** லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டங்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டுவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரிந்து பணியிடையில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் **279** நபர்களுக்கு பல்வேறு பதவிகளுக்கான கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் என்னால் இன்று வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 33 ஆயிரத்து 509 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 552 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்கிறேன். மேலும், 22 ஆயிரத்து 687 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 906 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் உண்மையான மக்கள் அரசு ஆகும். சாமானியர்களான நாங்கள் மக்களிடம் உண்மையை மட்டுமே எடுத்துரைப்போம்.

‘**உண்மையே என்றும் உயர்வு தரும்**’ என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுகின்றோம் என்பதைக் கூறும் போது இங்கு எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரிலே ஒரு வயதான பெரியவர் இருந்தார். அவர் ஒரு பண்ணையில் வேலை பார்த்து வந்தார். அவர் தனக்கு இட்ட பணிகளை மட்டும் செய்து கொண்டு, நேர்மையுடன் பணியாற்றி வந்தார். அந்தப் பண்ணையில் ‘‘கந்தன்’’ என்ற ஒருவரும் பணிபுரிந்து வந்தார். இவர் அந்த பெரியவருக்கு நேர் எதிரான குணம் உடையவர். பண்ணையாரை பார்க்கும் பொழுதெல்லாம், நீங்கள் எங்க குடும்பத்துக்கு நிறைய உதவிகளை செய்திருக்கிறீர்கள். உங்களால்தான் என் குடும்பம் நன்றாக இருக்கிறது என்று முகஸ்துதிக்காக பல கருத்துக்களை போலிப் புன்னகையுடன் தெரிவிப்பார். ஆனால் பணிகளில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்ற மாட்டார். குறுக்கு வழியில் பண்ணையாரின் நன்மதிப்பை பெற எண்ணினார்.

ஒரு நாள் கந்தனிடம் பயிர்களுக்கு தெளிக்கக் கூடிய பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி வரச் சொன்னார் அந்தப் பண்ணையார். ஆனால் கந்தன் பெரியவருக்கு கெட்டப் பெயர் வாங்கி தரும் தீய எண்ணத்துடன், பண்ணையார்

கூறியது போல் நல்ல பூச்சிக்கொல்லி மருந்தை வாங்காமால், போலிப் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி வந்து, அதை பெரியவரிடம் கொடுத்து, பயிர்களுக்கு தெளிக்கும்படி கூறினான். ஆனால், பணிகளில் எப்போதும் கவனமாக இருக்கும் பெரியவருக்கு, அந்த மருந்தை பார்த்தவுடன் சந்தேகம் வந்தது. எனவே, அதனை பரிசோதனைக் கூடத்தில் கொடுத்து பரிசோதிக்கச் சொன்னார். அவர்களும், இது உண்மையான பூச்சிக் கொல்லி மருந்தே கிடையாது. இதனால் பயிர்களே அழிந்து போய் விடும் என்று தெரிவித்தார்கள். உடனே அதிர்ந்து போன பெரியவர், இதனை பண்ணையார் கவனத்திற்கு எடுத்துச் சென்றார். பண்ணையார் உடனே கந்தனை கூப்பிட்டு இது பற்றி விசாரணை செய்தார். விசாரணையில் கந்தன் உண்மையை ஒத்துக்கொண்டான். அதனால் பண்ணையார் அவனுக்கு தகுந்த தண்டனை தந்தார். எப்போதும் பணியில் உண்மையையும், உழைப்பையும் காட்டும் அந்த பெரியவரைப் பாராட்டி அவருக்கு வெகுமதி அளித்ததோடு மட்டுமல்லாமல், ஊதிய உயர்வும் அளித்தார் பண்ணையார்.

உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றினால் கண்டிப்பாக பதவி உயர்வு உங்களை தேடி வரும் என்பதை இந்த கதை நமக்கு உணர்த்துகிறது.

இன்று நீங்கள் அனைவரும் மக்களிடம் நேரிடையாக அரசின் நலத்திட்டங்களை கொண்டு சேர்க்கும் உன்னதமான பணியினை செய்வதற்கான பணி நியமன ஆணைகள் பெற்றுள்ளீர்கள். நீங்கள் ஏற்றுக்கொண்ட இப்பணிக்கு, நேர்மையாகவும் சேவைப் மனப்பான்மையுடன் பணியாற்றி, வாழ்வில் உயர்நிலையை அடையவும், அதே நேரத்தில் அரசுக்கு நற்பெயரை பெற்றுத் தர வேண்டும் என்றும் அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சி அமைப்பு என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளை முழுவதும் நிறைவேற்றக் கூடியதும், மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதுமான மிகப் பெரிய அமைப்பாகும். ஒரு மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்பு சிறந்து விளங்கினால் மக்களிடத்தில் நன்மதிப்பு கூடும். அந்த வகையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலிருந்தே இந்தத் துறை சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து இந்தத்

துறையில் பல்வேறு திட்டங்களை வகுத்தளித்து இன்றைக்கு கிராமங்களிலிருந்து நகரம் வரை மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுவதும் நிறைவேற்றப்படக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு மக்களுடைய அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிக்கின்ற அரசு. ஆகவே, உள்ளாட்சித் துறையின் மூலமாக மக்களுக்கு நிறைய பணிகள், மக்கள் மனம் நிறைய, பணிகள் நிறைவேற்றப்படும் என்ற செய்தியைச் சொல்லி, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த துறையின் செயலாளர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**